பதிவெண் ...

T.N./K.C.M/36

©
தமிழ்நாடு அரசு
1995

# செங்கல்பட்டு-எம். ஜி. ஆர். மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

### ஆணையின்படி வெளியிடப்பட்டது

காஞ்சிபுரம், மார்ச் 4, 1995

மாசி 20, பவ, திருவள்ளுவர் ஆண்டு—2026 [ எண் 4

## உள்ளாட்சித் துறை அறிவிக்கை.

### குடிநீர் இணைப்புகளுக்கு வைப்பு தொகை நிதி பெறுவதற்கான அறிவிப்பு.

காஞ்சிபுரம் நகராட்சி.

இந்நகராட்சியின் குடிநீர் விநியோகத்தை அதிகரிக்கும் பொருட்டு உலக வங்கித் திட்டத்தின்கீழ் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தினை திட்ட மதிப்பீடு ரூ. 1,209 லட்சம் மற்றும் பராமரிப்பு திட்ட மதிப்பீடு ரூ. 26·03 இலட்சத்தில் செயலாக்க மன்றம் தனது தீர்மான எண் 510, 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21 ஆம் நாளில் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி நிதி உதவியை வட்டியுடன் திருப்பி செலுத்த நிதி ஆதாரத்தை ஏற்படுத்தும் பொருட்டு குடிநீர் இணைப்புகளுக்கு வைப்புத் தொகையை வசூலிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் 1993 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாளில் கூட்ட நடவடிக்கை எண் 11518/93/டபுல்யு.எஸ். 1-ல் தெரிவித்ததை நகர மன்றத் தீர்மான எண் 476, 1994 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம் நாளில் ஒப்புதல் வழங்கியது. இதற்கு கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்கள் கடித எண் 8655/பெ. 12726/டி3/92, 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17 ஆம் நாளிலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் கடித எண் 18136/94, டபுள்யு. எஸ். 1, 1994 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 4 ஆம் நாளிலும் கீழ்க் கண்ட விவரப்படி குடிநீர் இணைப்புகளுக்கு வைப்புத் தொகை வசூலிக்க அனுமதித்து ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதலை நகர் மன்ற தீர்மான எண் 244, 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் மற்றும் தீர்மான எண் 372, 1994 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28 ஆம் நாளில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. எனவே குடிநீர் இணைப்புகளுக்கு கீழ்க்கண்ட விவரப்படி வட்டி இல்லா நிரந்தர வைப்புத் தொகையை வசூலிக்கப்படும் என்றும் இதை மூன்று தவணைகளாக வசூலிக்கப்படும் என்றும், வைப்புத் தொகையை, குடிநீர் இணைப்பை நிரந்தரமாக துண்டிப்பு செய்யப்படும்போது திருப்பி அளிக்கப்படும் என்றும், இந்நடவடிக்கை 1995 ஆம் ஆண்டு

வரும் என்பதையும் பொதுமக்களுக்கு இன்னால் அறிவிக்கப்படுகிறது. நாள் முதல் நடை

| | | |
|---|---|---|
| 1. | குடியிருப்பு உபயோகத்திற்கான குடிநீர் இணைப்புகளுக்கு .. | ரூபாய். 3,000 |
| 2. | குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்கான— | |
| | (அ) தொழில் துறைக்கான குடிநீர் இணைப்புகளுக்கு .. | 5,000 |
| | (ஆ) வணிகத் துறைக்கான குடிநீர் இணைப்புகளுக்கு .. | 8,000 |

1994 டிசம்பர் 2.

குடிநீர் வழங்கு திட்ட வரைவு துணை விதிகள்

காஞ்சிபுரம் நகராட்சி

குழாய் செப்பனிடுபவர்களுக்கு "உரிமைகள்
வழங்க வகை செய்வதற்கும், உரிமம் பெற்ற
குழாய் செயல்படுபவர்களை கட்டாய நியமனம்
செய்வதற்கும் வகை செய்யும் 1920 ஆம்
ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள்
சட்டத்தின் 306 (7) (ஆ) பிரிவின்கீழ் இயற்றப்
பட்ட மாதிரி துணை விதிகளை அங்கீகரிக்க
மன்றத் தீர்மான எண் 348-ல் 1994 ஆம்
ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் நாள்
தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர்
வடிகால் வாரிய செயற்பொறியாளர், சென்னை-5
அவர்களின் கடித எண் 14246/எப்/12726/டி3,
1993 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14
ஆம் நாளின்படி ஒப்புதல் வழங்கியுள்ளார்.

1. ஆணையரால் உரிமம் அளிக்கப்பட்ட
குழாய் செப்பனிடுபவர் அல்லாத எவரும்
தனியார் கட்டிடங்களுக்கு நீர் வழங்குவதற்கு
அவசியமான பணிகளை செயல்படுத்தவோ
அல்லது அத்தகைய பணிகளைச் செப்ப
னிடவோ விரிவுபடுத்தவோ அல்லது மாற்றி
யமைக்கவோ கூடாது அல்லது அவ்வாறு
செய்ய அனுமதியளிக்கவும் கூடாது.

2. அரசினர் அனுமதித்துள்ள "தேர்வாளர்
வாரியத் தலைவரால்" வழங்கப்பட்ட "நீர்ப்
பணி இணைப்பாளர்" தகுதிச்சான்றிதழ்
பெற்றவர்கள் மற்றும் குழாய் செப்பனிடும்
சான்றிதழ் பெற்றவர்கள் (National Trade
certificate in the Trade of Plumbers issued by
National Council for Training in Vocational
Trades). அல்லது மேற்பார்வை பொறியாளர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம், சென்னை
அவர்கள் வரையறுக்கும் தகுதிகள் உள்ளவர்கள்,
ஒருவர் ரூ. 100 (ரூபாய் நூறு மட்டும்)
கட்டணம் செலுத்தி விண்ணப்பிப்பவர்களில்
தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த நபருக்கு நிர்வாக
அதிகாரி "குழாய் செப்பனிடுதல் உரிமம்"
வழங்கலாம். இந்த உரிமம் வழங்கப்படும்
தேதி முதற்கொண்டு ஓராண்டு கால
அளவிற்கே செல்லும்" இறுடையதாகும்.
ஆனால் ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ. 50
கட்டணம் செலுத்தி இந்த உரிமத்தை புதுப்
பித்துக்கொள்ளலாம்.

3. உரிமம் பெற்ற "குழாய் செப்பனிடுபவர்"
ஒவ்வொருவரும் அவருக்கு உரிமம் வழங்கப்படு
முன் அவரது கடமைகளை முறையாகவும்
ஒழுங்காகவும் நிறைவேற்றுவதற்கு உத்திர
வாதமாக ரூ. 1,000 (ரூபாய் ஆயிரம் மட்டும்)
நகராட்சியில் வைப்பீட்டு தொகையாக செலுத்
தப்பட வேண்டும்.

4. உரிமம் பெற்ற "குழாய் செப்பனிடு
பவர்களின்" பட்டியல் ஒன்று நகராட்சி
அலுவலகத்தில் வைத்திருக்கப்பட வேண்டும்.

5. ஓர் இல்லத்திற்கு, புதியதாக குழாய்
இணைப்புக் கொடுக்கப்படுகையில் மனுதாரரால்
தேர்ந்தெடுக்கப்படும் குழாய் செப்பனிடுபவர்
அதற்கான மனு ஒன்றை இந்த துணை
விதிகளுடன் இணைத்துள்ள "ஆ" படிவத்தில்
நகராட்சி அலுவலகத்தில் கொடுக்கவேண்டும்.
இம்மனுவில் குழாய் இணைப்பு தேவைப்
படுகிற கட்டிடங்களின் உரிமையாளர் அல்லது
அவற்றின் குடியிருப்பாளர் கையொப்ப
மிட்டிருக்க வேண்டும். அந்த மனுவுடன்
நிர்வாக அதிகாரி ஒப்புதலைப் பெறுவதற்காக
குழாய் இணைப்பினை செயல்படுத்துவதற்கான
"மதிப்பிடு" ஒன்றின் இரண்டு நகல்கள்
அனுப்பவேண்டும்.

6. அந்த மதிப்பீட்டில் கீழ்க்கண்டவை
அடங்கியிருத்தல் வேண்டும்.—

(அ) அப்பணிக்கு தேவையான பொருட்கள்
அனைத்திற்குமாக விலை விவரங்கள்.

(ஆ) நகராட்சியினரால் மேற்கொள்ளப்பட
வேண்டிய எல்லா பணிக்குமான செலவினங்கள்.
இவற்றில் சாலைகளைத் தோண்டுதல்
வேலைக்கு பின்னர் வெட்டிய சாலையை
மீண்டும் பழைய நிலைக்கு சீர்படுத்துதல்,
நீர் பெருங்குழாயை இணைத்தல் ஆகிய
வேலைகளுக்காக ஆணையரால் நிர்ணயிக்கப்
பட்ட "விலை விதங்கள்" ஆகியவை
அடங்கும்.

(இ) குழாய் இணைப்பை செயல்படுத்தி
முடிப்பதற்கான இதர எல்லாப் பணிகளுக்கும்
உரிய செலவினங்கள்; மேலும்

(ஈ) அ, ஆ, இ. ஆகிய தொகைகளின்
மொத்தத்தில் 10 சதவீதத்தின் நிகரான
தொகை அல்லது ஆணையரினால் முடிவு
செய்யப்படும் பிற (அதிகபட்சமாக 15 சத
வீதம்) சதவீதத் தொகை.

7. மதிப்பீட்டிற்கு ஒப்புதல் கிடைக்கப்
பெற்றவுடன் குழாய் செப்பனிடுபவர் 6 ஆவது
துணை விதியின் (ஆ) (ஈ) இனங்களின் கீழ்க்
குறிப்பிடப்பட்டுள்ள செலவுத் தொகைகளை
நகராட்சிக்கு செலுத்த வேண்டும்

8. 6 (ஆ) துணை விதியில் குறிப்பிட்டுள்ள
பொருட்கள் அனைத்திற்கும் குழாய் செப்பனிடு
பவர் வைப்பீடு செய்யவேண்டும். அன்னாரது
வைப்பீடு செய்யப்பட்டது பற்றிய அறிவிப்பு
கிடைத்தவுடன் ஆணையர் அல்லது அவரால்
அதிகாரம் அளிக்கப்பட்ட ஒருவர் இருபத்து
நான்குமணி நேரத்திற்குள் அப்பொருட்களைப்
பார்வையிட்டு அப்பொருட்கள் சரியான
வகையைச் சார்ந்தவையாக இருப்பின்,
இணைப்பு கொடுப்பதற்கான நடவடிக்கைகளை

மேற்கொள்ள வேண்டும். தன்னுடைய வேலை முடிவுற்றவுடன் குழாய் செப்பனிடுபவர் ஆணையர் அவர்களுக்கு அதனை தெரிவிக்க வேண்டும். ஆணையர் அத்தகைய தகவல் கிடைத்த 48 மணி நேரத்திற்குள் அந்த இணைப்பிற்குரிய எஞ்சிய இதர வேலைகளை முழுமையாக முடிப்பதோடு அவற்றிற்கான சோதனைகளையும் முடித்து பயன் வழங்குவதற்காகத் திறந்துவிட வேண்டும்.

9. மதிப்பீடுகள் அனுப்புதல், கட்டணங்களைச் செலுத்துதல், வேலையைச் செயல்படுத்த ஆகியவற்றிற்கு பின்பற்றப்படும் மேற்கண்ட நடைமுறையையே நீடிப்பு, மாற்றம், பழுது பார்த்தல் ஆகிய பணிகளை, மேற்கொள்ளும் போதும் பின்பற்ற வேண்டும். மேற்கண்ட நடைமுறைகளை பின்பற்றாமல் புதிய வேலைகள், நீடிக்கும் பணிகள், மாற்றங்கள், செப்பனிடும் வேலைகள் ஆகிய எவையும் நிறைவேற்றப்படக்கூடாது.

10. குழாய் செப்பனிடுபவர் அனைவரும் நகர்மன்றத்தினரால் கொடுக்கப்பட்ட புத்தகம் ஒன்றை வைத்திருக்க வேண்டும். தனியார் வீடுகளில் குழாய் இணைப்புக் கொடுத்தல் தொடர்பாக அவர்கள் மேற்கண்ட எல்லா வகை வேலைகளைப்பற்றிய விவரங்களும், எழுதப்பட்டிருக்க வேண்டும். இப்புத்தகம் நகராட்சியின் உடைமையாகும். இப்புத்தகம் ஒவ்வொரு திங்களும் 15 ஆம் நாளன்று நகராட்சிக்கு அனுப்பபடவேண்டும்.

11. (அ) பயன்படுத்தப்படும் எல்லா பொருட்களும் பயன்படுத்தப்படவிருக்கிற எல்லா பொருட்களும், நிறைவேற்றப்பட்ட எல்லா வேலைகளும், நகராட்சியின் முறையான அதிகாரம் பெற்ற அதிகாரிகளால் மேற்பார்வை செய்யப்படுவதற்கும் ஒப்புதல் அளிக்கப்படுவதற்கும் அல்லது மறுக்கப்படுவதற்கும் உட்பட்டதாகும்.

(ஆ) வீட்டிணைப்பிற்கான மதிப்பீடு நீரளிப்புத் துணைவிதிகளின் மற்றும் இதர சட்ட திட்டங்களுக்கிணங்க இருக்கப்பட வேண்டும்.

12. நீர் குழாயின் அடைப்பான்கள், திருகு குழாய்கள், நீர்க்குழாய்கள் அனைத்தும் நகராட்சி அலுவலகத்தில் அல்லது பண்டகசாலையில் வைத்துள்ள மாதிரிகளைச் சார்ந்திருக்கவேண்டும். நீர்க்குழாய் அடைப்பான் தடுக்கிதழ்கள் அல்லது இவை போன்ற பிற பகுதிகளை எவையும் நகர்மன்றப் அதிகாரம் பெற்ற அதிகாரியினால் ஒப்புதல் அளிக்கப்பட்டாலன்றி பயன்படுத்தக்கூடாது.

13. ஒரு கட்டிடத்திற்கு செல்லும் நீர் நிறுத்தப்படவேண்டும் என்றாலோ அல்லது ஒரு கட்டிடத்திற்கு நீர் அனுப்பபடவேண்டும் என்றாலோ குழாய் செப்பனிடுபவர் ஆணையருக்கு மனுச்செய்து கொள்ளவேண்டும். அப்படியின்றி எந்த குழாய் செப்பனிடுபவரும், தெருக்குழாய், குழாய் அடைப்பான் அல்லது தடுக்கிதழ்களில் தலையிடவே கூடாது.

14. குழாய் செப்பனிடும் ஒருவர் எதாவது ஒரு துணை விதி அல்லது ஒழுங்கு விதியை மீறி நடந்தால் அல்லது அந்த விதி அல்லது ஒழுங்கு விதியைப் பின்பற்றாமல் ஏய்த்தால் அல்லது இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறி நடந்தால் அல்லது நகர்மன்றத்தினரால் முறைப்படி அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகாரியின் நியாயமான உத்திரவுக்குக் கீழ்படிய மறுத்தால் அல்லது அவரது வேலை மனநிறைவினைத் தருவதாக இல்லை என ஆணையர் நினைத்தால் எச்சமயத்திலும் உரிமம் பெற்ற குழாய் செப்பனிடுபவர் ஒருவருக்கு அபராதம் விதிக்கலாம் அல்லது வேலையில் இருந்து நிறுத்திவைக்கலாம் அல்லது அவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தினை ரத்து செய்வதுமின்றி பிணைத் தொகையையும் பறிமுதல் செய்யலாம்.

15. உரிமம் நிறுத்தி வைக்கப்பட்ட அல்லது ரத்து செய்யப்பட்ட குழாய் செப்பனிடுபவர் ஒருவர் அவ்வாறு உரிமம் நிறுத்திவைக்கப்பட்ட அல்லது ரத்து செய்யப்பட்ட இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் தமது உரிமத்தை ஆணையரிடம் திருப்பிக்கொடுத்து விட வேண்டும்.

படிவம் 'ஆ'

பெறுநர்:

ஆணையர்,
காஞ்சிபுரம் நகராட்சி,
காஞ்சிபுரம்.

அய்யா,

திருத்தப்பட்டுள்ள 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 306 (7) (ஆ) பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள துணை விதிகளையொட்டி........ ..................வார்டில்...................... தெருவில் உள்ள.......................... கதவிலக்கத்தில் (1) புதியதாக நீர்க்குழாய் இணைப்பு ஒன்றைக் கொடுக்க அல்லது (2) தற்போதுள்ள இணைப்பை நீடிக்க, மாற்றியமைக்க, செப்பனிட முடிவு செய்திருக்கிறேன் என்று அறிவிப்பு கொடுக்க விழைகிறேன். நிறைவேற்றப்படவேண்டிய வேலைக்குறிய மதிப்பீட்டின் இரண்டு நகல்களைவும், மதிப்பீட்டுத் தொகை குறிப்பிட்டு இத்துடன் அனுப்பியுள்ளேன். மேற்படி வேலையை நிறைவேற்ற உரிமம் பெற்றுள்ள குழாய் செப்பனிடுபவராகிய திரு.........................என்பவரை நான் நியமித்துள்ளேன். எனவே மேற்படி பணியை செயல்படுத்த அனுமதி வழங்குமாறு நான் வேண்டுகிறேன்.

உரிமையாளரின் அல்லது குடியிருப்பவரின் கையொப்பம்.

முகவரி:

உரிமம் பெற்ற குழாய் செப்பனிடுபவரது கையொப்பம்.

முகவரி:

## காஞ்சிபுரம் நகராட்சி

(1920-ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 309 ஆவது பிரிவின்கீழ் செய்யப்பட்ட திருத்தங்களின் அறிவிப்பு.)

இதுவரை திருத்தப்பட்ட 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 130, 131, 132, 133, 306 (2) (டி) (ஐ) (எப்) (ஜி) (எச்) (ஐ) ஆகிய பிரிவுகளின்படி அமைக்கப்பெற்று தற்பொழுது நடைமுறையில் உள்ள விதிகளில் உள்ள நீரளிப்பு கட்டணத்தை மாற்றியமைக்கும் இந்நகராட்சி நீரளிப்பு துணை விதிகள் திருத்தத்தை காஞ்சிபுரம் நகர மன்றம் தனது 1994 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22 ஆம் நாளிட்ட தீர்மான எண் 516-ல் ஒப்புதல் பெறப்பட்டது. மேற்படி திருத்தத்திற்கு தமிழ்நாடு குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் வாரிய மேற்பார்வை பொறியாளர் தனது 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள் கடித எண் 8655/எப்/12726/டி3/92-ல் கீழ் குறிப்பிட்டுள்ள திருத்தங்களின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேற்படி நீரளிப்பு கட்டணத்தை நகர மன்றம் தனது 1994 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30 ஆம் நாளிட்ட தீர்மான எண் 419-ல் ஒப்புதல் அளித்து தீர்மானித்துள்ளது. இத்திருத்தம் 1994 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது என்பதையும் பொதுமக்களுக்கு இதனால் அறிவிக்கப்படுகிறது.

| குழாய் விவரம். (1) | நடைமுறையிலுள்ள கட்டணம். (2) | 1994 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாள் முதல் திருத்தம் செய்யப்பட்டவை. (3) |
|---|---|---|
| 1 சாதாரண குழாய் இணைப்பு முறை. | குடியிருப்பு உபயோகத்திற்கான குழாய் இணைப்பு 1-க்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 20. | குடியிருப்பு உபயோகத்திற்கான குழாய் இணைப்பு 1-க்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 30 விதம். |
| 2 மீட்டர் முறையிலான குழாய் இணைப்பு முறை. | (1) குடியிருப்பு உபயோகத்திற்கான குழாய் இணைப்பு 1-க்கு மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்ச கட்டணம் ரூ. 20-ம் கூடுதலான ஒவ்வொரு 1,000 லிட்டருக்கு ரூ. 2 விதமும். | (1) குடியிருப்பு உபயோகத்திற்கான குழாய் இணைப்பு 1-க்கு மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்ச கட்டணம் ரூ. 30-ம் கூடுதலான ஒவ்வொரு 1,000 லிட்டருக்கு ரூ. 3 விதமும். |
| | (2) குடியிருப்பு அல்லாத தொழிற்சாலைகளுக்கான உபயோகத்திற்கு இணைப்பு 1-க்கு மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்ச கட்டணம் ரூ. 40-ம் கூடுதலான ஒவ்வொரு 1,000 லிட்டருக்கு ரூ. 4 விதம். | (2) குடியிருப்பு அல்லாத தொழிற்சாலைகளுக்கான உபயோகத்திற்கு இணைப்பு 1-க்கு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்ச கட்டணம் ரூ. 60-ம் கூடுதலான ஒவ்வொரு 1,000 லிட்டருக்கு ரூ. 6 விதமும். |
| | (3) குடியிருப்பு அல்லாத வணிக உபயோகத்திற்கு இணைப்பு 1-க்கு மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்ச கட்டணம் ரூ. 60-ம் கூடுதலான ஒவ்வொரு 1,000 லிட்டருக்கு ரூ. 6 விதமும். | (3) குடியிருப்பு அல்லாத வணிக உபயோகத்திற்கு இணைப்பு 1-க்கு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்ச கட்டணம் ரூ. 90-ம் கூடுதலான ஒவ்வொரு 1,000 லிட்டருக்கு ரூ. 9 விதமும். |

காஞ்சிபுரம்,
1995 ஜனவரி 3.

வி. சீனிவாசன்,
நகராட்சி ஆணையர்.

தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநரால் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.